**<u>DEPOSITION OF WITNESS</u>**

---

**MCOP. No. 589/2025** **DATE:10.11.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mrs. Muthumaari

Father/Husband Name : Mr. Maarikannan

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 10th day of November 2025.

---

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் விபத்து நடக்கும் போது லோடு ஏற்றி இறக்கும் வேலைப்பார்த்ததாக சொல்லப்பட்டுள்ளது. என் கணவர் முதல் எதிர்மனுதாரரின் லாரியை பின்னுக்கு வரசொல்லி சைகை காட்டும் போது லாரியின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி விபத்தினை ஏற்படுத்தினார் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இறந்துபோன என் கணவர் காளிமுத்து என்பவருக்கு மச்சான் முறை என்றால் சரிதான். இழப்பீட்டு மனுவில் 4 வது பத்தியில் என் கணவர் கடை உரிமையாளர் என்று சொல்லியுள்ளதுக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவரது மச்சான் தான் உரிமையாளர் அவரிடமிருந்து என் கணவர் எடுத்து வேலைபார்த்து வந்தார். என் கணவரது மச்சான் அதிக இழப்பீடு பெற்று தரவேண்டும் என்பதற்காக மசாஆ 8 ல் என் கணவர் அவரிடம் Supervisor வேலை பார்த்ததாகவும்

ரூ.30,000/- மாத சம்பளம் கொடுத்துள்ளதாகவும் மிகைப்படுத்தி சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவரது வங்கி கணக்கு விவரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் கணவருக்கு இந்தியின் வங்கியில் கணக்கு உள்ளது. ஆனால் வங்கி கணக்கு எண், கிளை விவரம் தெரியாது. என் கணவரக்கு நிரந்தர வருமாணம் கிடையாது என்றும், கூலித் தொழில் தான் பார்த்து வந்தார் என்றும் அதை மறைபதற்காக வங்கி கணக்கு விவரம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவரது பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என் கணவருக்கு மனுதாரர்கள் மட்டுமே வாரிசு என்பதை அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இழப்பீட்டு மனுவில் மருத்துவமனையில் சேர்த்த அன்றே என் கணவர் இறந்து போனதாக சொல்லியிருப்பது பொய் என்றும், முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துபோனதாக கூறப்பட்டுள்ளது என்றும், அதை மறைப்பதற்காக தெளிவில்லாத படிக்கமுடியாத விபத்து பதிவேடு நகல் , இதர ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நடந்தபோது என் கணவரை 108 ஆம்பூலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்து நடந்த அன்றே என் கணவர் இறந்துபோனார் என்றால் சரிதான். போக்குவரத்து செலவிற்காக ரூ.20,000/- கூடுதல் போஷாக்கிற்காக ரூ.20,000/- என்று கூடுதல் இழப்பீட்டிற்காக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1923 ஆண்டு பணியாளர் சட்டத்தின் பிரவு 3ன் கீழ் கடையின் உரிமையாளரான காளிமுத்து என்பவர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், அதை தட்டிக்கழிக்கவே என் கணவர் அஜாக்கிரதையாக லாரியின் பின்புறம் நின்று சைகை காட்டி விபத்தை வரவைத்துக்கொண்டார் என்பதை மாற்றி முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளார் என்றால்

சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீடு மிக மிக அதிகம் என்றும், அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே இழப்பீடு கிடைக்ககூடியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மேலும் என் கணவரின் முதலாளியான காளிமுத்து என்பவரே கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:10.11.2025.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.